ஒரு நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அந்த நாட்டில் உள்ள சுற்றுலா மையங்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும்.

சுற்றுலாத் துறையினர் நமது பண்டைப் பெருமைகள், பழைய பொழுதுபோக்குக் கூறுகள், மரபுக்கலைகள், கைவினைப் பொருட்கள், நாட்டுப்புறக் கலைகள் ஆகியனவற்றைப் பாதுகாக்கவேண்டும். புதிய பொழுதுபோக்குக் கூறுகளை உருவாக்க வேண்டும்.

தொல்பொருள் ஆய்வுத் துறை, உலக விமானக் கழகம், சுங்கத்துறை, ரயில் நிலையங்கள், போக்குவரத்துக் கழகங்கள், வனத்துறை, கைத்தறி மற்றும் கைவினைப் பொருள் துறை, சுற்றுலா முகவர்கள், சுற்றுலா நடத்துநர்கள், அரசு மற்றும் தனியார் விடுதிகள் ஆகியன சுற்றுலாத்துறை வளர்ச்சிக்குப் பாடுபடுகின்றன.

## இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நோக்கங்கள்:

1. இந்தியாவில் பல பகுதிகளில் விடுதிகள், மோட்டல்கள், உணவகங்கள், சுற்றுலா மாளிகைகள், விருந்தினர் விடுதிகள் போன்றனவற்றைக் கட்டி நிருவகிப்பது. 2. சுற்றுலாப் பயணிகளுக்குப் போக்குவரத்து வசதிகள் செய்து தருவது. 3. சுற்றுலாப் பயணிகளுக்குப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து தருவது 4. சுற்றுலாப் பயணிகள் தரமான பொருட்கள் வாங்க உதவி செய்வது 5. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இந்தியச் சுற்றுலாவை மேம்பாடு அடையச் செய்வது போன்ற நோக்கங்களைக் கொண்டுள்ளது. சுற்றுலாவை வாணிகமாக்குவதே அதன் முக்கியப் பணியாகும். அது இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக்குப் பாடுபடுகிறது.

பல்வேறு நிபுணர் குழுக்களும், ஆலோசனைக் குழுக்களும் சுற்றுலாத்துறை வளர்வதற்குப் பாடுபடுகின்றன.

# 1. 6. சுற்றுலாத் தொழிலின் முக்கியத்துவம் (நன்மைகள்)

சுற்றுலாக்கள் இருவகைப்படும். 1. உள்நாட்டுச் சுற்றுலா 2. பன்னாட்டுச் சுற்றுலா. ஒரு நாட்டில் வாழும் மக்கள் அதே நாட்டின் பிற பகுதிகளில் பயணம் செய்வது உள்நாட்டுச்

Scanned by CamScanner

சுற்றுலா. நாடுவிட்டு நாடு, கண்டம் விட்டு கண்டம் பயணம் செய்வது பன்னாட்டுச் சுற்றுலா. இருவகைச் சுற்றுலாக்களும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றன. அனைத்துலக அளவில் ஆண்டுதோறும் 270 மில்லியன் பயணிகள் சுற்றுலா செல்வதாகவும் அவர்கள் மூலம் கிடைத்த வருவாய் 75 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டாலர்கள் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் தொழிலால் வளர்ச்சியுள்ள நாடுகளும், வளர்ந்து வரும் நாடுகளும் பெரும்பயன்களை அடைந்துள்ளன.

1. பல நாடுகளுக்குப் பன்னாட்டுச் சுற்றுலாவால் கிடைக்கும் வரவுகள் அவற்றின் வருவாயில் முக்கியப் பகுதியாக அமைந்துள்ளன. வணிகப் பண்டங்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயைவிட சுற்றுலா மூலம் கிடைக்கும் வருவாய் கூடுதலான அளவில் பெருகியுள்ளது.

2. பல நாடுகள் தங்கள் வருவாய்க்குச் சுற்றுலா தொழிலையே நம்பியுள்ளன. ஸ்பெயினில் மக்கள் எண்ணிக்கை 46 மில்லியன். ஆனால் அந்நாட்டிற்கு வருகை தந்த பயணிகள் எண்ணிக்கை 50 மில்லியன். கரீபியன் கடற்பகுதி நாடுகள் பெரும்பாலும் சுற்றுலா வருவாயை வைத்தே பிழைப்பு நடத்துகின்றன. வளர்ச்சியுற்ற நாடாகிய கனடா கூட சுற்றுலா வருவாயைப் பெரிதும் எதிர்நோக்குகிறது. இவ்வாறு பல நாடுகளின் அயல்நாட்டுச் செலாவணியை ஈட்டுவதில் சுற்றுலா முக்கியப் பங்கு பெற்றுள்ளது.

3. அயல்நாட்டுப் பயணிகளிடமிருந்து கிடைக்கும் அயல்நாட்டுச் செலாவணி ஒரு நாட்டின் தேசிய வருவாயைக் கூட்டுகிறது. ஏற்றுமதி, இறக்குமதியை விடக் குறைவாக இருப்பதால், ஏற்படும் இழப்பை சுற்றுலா, கண்ணுக்குப் புலப் படாத ஏற்றுமதிப் பொருளாகச் செயல்பட்டுக் குறைக்கிறது.

4. பல வளர்ந்து வரும் நாடுகள் குறிப்பாக சிறுநாடுகள் சில பணப்பயிர்களைச் சார்ந்தே இருக்க வேண்டியுள்ளது. அவற்றால் கிடைக்கும் வருவாயும் நிலையானதன்று. அந்த நாடுகளில் சுற்றுலா உறுதியான, நம்பகமான வருவாயை வழங்குகிறது. சுற்றுலா, மிகவும் தேவைப்படும், அயல்நாட்டுப் பணத்தைச் சம்பாதித்து, செலுத்துதல் சமநிலையில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

5. சுற்றுலாப் பயணிகள் செலவிடும் பணம், பல கைகள் மாறி பல பொருளியல் துறைகளை ஊக்குவிக்கின்றது. விடுதியில் தங்கியதற்கான தொகையை ஒரு பயணி விடுதியாளரிடம்

Scanned by CamScanner

தருகிறார் என்று வைத்துக்கொள்வோம். அந்தத் தொகையில் பெரும்பகுதி அவருக்கு உணவாகவும், பானமாகவும், விரிப்பாகவும், சலவை சேவையாகவும், மின் விசையாகவும், கேளிக்கைகளாகவும், பொருள் வடிவிலும், சேவை வடிவிலும் வழங்கியோருக்குக் கொடுக்கப்படுகிறது. பணத்தைப் பெறுவோரும் தங்கள் தொழிலோடும் பணியோடும் தொடர்புடையோருக்குப் பணம் கொடுக்கிறார்கள். இவ்வாறு பணம் பல துறைகளில் புழங்கி உருண்டோடுகிறது. சுற்றுலாத் தொழிலுக்குப் பொருட்களையும் பணிகளையும் வழங்கும் வேறு பல தொழில்களுக்கும் மறைமுகமாக உதவுகிறது. உடல் முழுவதும் இரத்தம் ஓடி எல்லாப் பகுதிகளுக்கும் ஊட்டத்தைத் தருவதுபோல் சுற்றுலா வருவாய் தேசியப் பொருளாதாரத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் ஊட்டமளிக்கிறது.

6. சுற்றுலா, குறிப்பாக, சுற்றுலாத் தொழிலை வளர்ப்பதற்கென்று பெருந்தொகையைச் செலவிட்டுச் செய்யப்படும் பொது வசதிகளை - விமானநிலையங்கள், நெடுஞ்சாலைகள், குளியலறைகள் போன்றனவற்றைப் பிற தொழில்களைச் சார்ந்தோரும் பயன்படுத்திக் கொள்கின்றனர். பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளின் நலனுக்கென்றும் அவர்களை ஈர்ப்பதற்கென்றும் உருவாக்கப்படும் பல வசதிகள் ஆடம்பர விடுதிகள், நீச்சல் குளங்கள், விளையாட்டு அரங்குகள், தேசிய பூங்காக்கள் போன்றனவற்றை உள்நாட்டுப் பயணிகளும், வணிகர்களும், குடியிருப்போரும் ஏனையோரும் அனுபவிக்கின்றனர். சுங்கவரி, விற்பனைவரி போன்றனவற்றால் நேரடியாகவும், மறைமுகமாக சொத்துவரி, வருமானவரி போன்றவை மூலமாகவும் வரி வருவாயை அதிகரிக்கின்றனர்.

7. தொழில், பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பல பகுதிகள் சுற்றுலா மூலம் பொன் விளையும் பூமிகளாக மாறியுள்ளன. பின்தங்கியுள்ள பகுதிகள் பல இயற்கைக் காட்சிகளும், கலாச்சாரச் சிறப்புகளும் நிரம்பியவையாக உள்ளன. அங்கு பயணிகள் செலவிடும் பணம் சற்று வட்டாரப் பகுதிகளையும் வளப்படுத்துகிறது. உதாரணத்திற்கு கஜுராஹோவை எடுத்துக் கொள்வோம். இருபதாண்டுகளுக்கு முன்பு யாரும் அறியாத குக்கிராமமாக இருந்தது. இப்போது அது சுற்றுலா வரைபடத்தில் முக்கிய இடம் பெற்றுவிட்டது. ஆயிரக்கணக்கான உள்நாட்டு, அயல்நாட்டுப் பயணிகளை அது கவர்ந்திருக்கிறது. டெல்லியிலிருந்து கஜுராஹோ செல்லும் இடத்திற்கு இடம் கிடைப்பதே பெரும்பாடாக உள்ளது

அங்குள்ள கோயில்களில் உள்ள கட்டடக் கலையழகையும், காதற்கலை சிலைகளின் அழகையும் கண்டுகளிக்க விமானம், ரயில், பேருந்து போன்ற வாகனங்களில் வந்து குவிகிறார்கள். இதனால் கஜுராஹோவைச் சுற்றியுள்ள பகுதிகள் புத்துயிர் பெற்றுள்ளன. நூற்றுக்கணக்கான மக்களுக்கு உணவு, உறையுள் விடுதிகளிலும், கடைகளிலும் வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது. சிற்பங்களின் மாதிரி உருவங்களை பொம்மை வடிவில் தயாரிக்கும் தொழிற்சாலைகளும், கைத்தறி கைவினைப் பொருள் தொழில்களும் பெரும் வளர்ச்சியுற்றுள்ளன. இதனால் அங்குள்ள மக்கள் மிகுந்த வேலைவாய்ப்புகளையும் கூடுதல் வருவாயையும் வளத்தையும் பெற்றுள்ளனர். வேறு தொழில் வளர வாய்ப்பில்லாத சுற்றுலா மையங்களில், திட்டமிட்டு வசதிகளைப் பெருக்கினால், சுற்றுலா தொழிலோடு, பிற தொழில்களும் வளர்ந்து பின்தங்கிய பகுதிகளிலும் வளம் கொழிக்கும்.

8. சுற்றுலாத் தொழில் ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்புகள் தரக்கூடிய தொழில். வேறு பணிகளுக்கு பல்வேறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். நேரடியாக சுற்றுலாத் தொழிலில் பணியாற்றுகிறவர்கள் போக அதனைச் சார்ந்துள்ள பல தொழில்களிலும் வேலை வாய்ப்புகளைப் பெருக்குகிறது. எடுத்துக்காட்டாக, பானங்களையும், உணவு வகைகளையும், தயாரிக்கத் தேவைப்படும் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில், கட்டில், நாற்காலி, மின்விசிறி, மெத்தை, விரிப்பு போன்றனவற்றைத் தயாரிக்கும் தொழில், வழிகாட்டிகள், சுமை தூக்குவோர், தோட்டக்காரர்கள் இப்படி ஏராளமானவர்களுக்கு வேலையும் ஊதியமும் கிடைக்கிறது. விடுதிகள், விமான நிலையங்கள், பாதைகள் போன்றனவற்றைக் கட்டவும், பழுது பார்க்கும் பணியாளர்கள் ஏராளமாக வேண்டியுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாக உள்ள இந்தியா போன்ற வளர்ச்சியுறும் நாடுகளில் சுற்றுலாத் தொழிலை வளர்க்கத் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

9. பிறரது கலாச்சாரம், நடையுடை பாவனைகள், பழக்க வழக்கங்கள் போன்றனவற்றைத் தெரிந்துகொள்ளும் ஆர்வம் தொன்று தொட்டுப் பயணங்களுக்கு முக்கியமானதொரு காரணமாக அமைந்துள்ளது. நாட்டின் கலாச்சாரச் சிறப்புகளையும், கலையழகுப் பொருட்களையும், விற்பனைப் பண்டங்களாக்குவதன் மூலமாக கலையும் வளர்கிறது. பொருளாதார நிலையும் உயர்கிறது. இத்தாலியப் பத்திரிகை 'டெம்போ'வில் வெளியான விளம்பரம் ஒன்று இரண்டுக்குமுள்ள

தொடர்பினை விளக்குகிறது. கைகளில் பல பொட்டலங்களை வைத்துள்ள அயல்நாட்டு சீமாட்டி ஒருவரின் படத்தைப் போட்டுப் பின்வருமாறு எழுதியிருந்தது. 'கலையழகுக் கருவூலம்' ஒன்றினை வியந்து நோக்கியவண்ணம் ஓர் அயல்நாட்டுச் சீமாட்டி அதன் முன்னால் நிற்கிறார். அதைக் காணவே அவர் இத்தாலிக்கு வந்தார். அந்தச் சீமாட்டி மிலானில் ஆறு இணைச் செருப்புகளையும், ரோமாபுரியில் ஏழு ஆடைகளையும், பிளாரன்சில் ஒன்பது மேசை விரிப்புகளையும் வாங்கினார்.

10. நம்முடைய கலைப்பாரம்பரியம் கலாச்சாரத்திற்கும் செல்வத்திற்கும் வற்றாத ஊற்று. அது வறண்டு விடாமல் பாதுகாப்போம். நம்முடைய நாட்டிலும், காஞ்சிபுரம் பட்டு, கும்பகோணம் பாத்திரம், காஷ்மீர் கம்பளம், தமிழ்நாட்டுச் சிலைகள் இப்படி பல கலைப்பொருட்கள் உருவாகின்றன. இவை பெரும் விலைமதிப்புடையவையும் ஆகும். கலைப் பொருட்கள் விற்பனை மூலமும் வளம் பெருகுகிறது. சுற்றுலா பிறரது கலாச்சாரங்களை நேரடியாக அறியும் வாய்ப்பைத் தருகிறது. வளர்ச்சியடையாத பல நாடுகள் கலாச்சாரச் சிறப்புடையன. எனவே, அமெரிக்கா, ஐரோப்பியா போன்ற குபேர பூமிகளிலிருந்து தொன்மையான கலாச்சாரங்களைக் காணத் திரளான பயணிகள் வருகிறார்கள். இதன்மூலம் இருவழிக் கலாச்சாரப் பரிமாற்றம் நடைபெறுகிறது.

11. பல நாட்டு மக்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள சுற்றுலா துணை செய்கிறது. அவர்களுக்கிடையே நட்பையும், நல்லுறவையும் பேணி வளர்க்கிறது. சுற்றுலா உலக மக்களுக் கிடையே குறுக்குச் சுவர்களைத் தகர்த்து கலாச்சாரப் பாலங் களைக் கட்டுகிறது. பன்னாட்டுணர்வையும், உலக ஒருமைப் பாட்டையும் வளர்ப்பதில் சுற்றுலா ஒரு சிறந்த சாதனமாகும்.

## 1.7 தீமைகள்

1. சுற்றுலாவினால் பல நன்மைகள் ஏற்பட்டாலும் சில தீமைகளும் ஏற்படுகின்றன. சுற்றுலாவினால் எயிட்சு போன்ற பால்வினை நோய்கள் பரவ வாய்ப்புகள் உள்ளன. புற்றுநோயைக் கண்டு அஞ்சிய உலகு இன்று எயிட்சு நோயைக் கண்டு அஞ்சுகிறது. எயிட்சு நோய் இன்றைய மருத்துவ உலகைக் கலக்கிக் கொண்டு இருக்கிறது. சுற்றுலாவினால் அம்மை, காலரா, மஞ்சள் காமாலை போன்ற நோய்களும் பரவியுள்ளன.

Scanned by CamScanner

2. நாகரிகம் என்னும் பெயரில் பண்பாடற்ற நடை, உடை பாவனைகள் வளர்கின்றன. கோவா கடற்கரையில் சில மேல்நாட்டுப் பயணிகள் ஆடையின்றியிருப்பது இளைஞர்களின் மனத்தைப் பாழ்படுத்துகிறது. அதனால் நாட்டின் மரபு, பண்பாடு, நாகரிகம் போன்றவை அழிய வாய்ப்புகள் உள்ளன. சிலர் மேல்நாட்டு முறையைப் பின்பற்றுவதற்கு மிகுதியாகச் செலவிடுகின்றனர். வெளிநாட்டுப் பொருட்கள் மீது கொண்டுள்ள மோகம் பொருளாதாரச் சீர்குலைவை ஏற்படுத்தலாம். கள்ளக்கடத்தல் அதிகமாகலாம். சுற்றுலா சமூகக் கிளர்ச்சியை உருவாக்குகிறது. மற்றவர்களுக்கு அடையாளம் தெரியாத காரணத்தால் சில வெளிநாட்டுப் பயணிகள் அரைகுறை உடைகளுடன் தெருக்களில் நடந்து செல்கின்றனர். அச்செயல்கள் இளைஞர்களின் உள்ளத்தில் தவறான உணர்ச்சிகளை உருவாக்குகின்றன. அவ்வுடைகளைக் கண்ட சிலரும், அவை போன்ற உடைகளை அணியத் தொடங்குகின்றனர்.

3. வெளிநாட்டுப் பயணிகளுள் சிலர் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளனர். அப்பழக்கம் அவர்கள் செல்லும் நாடுகளிலும் பரவுகிறது. வெளிநாட்டுப் போதைப் பொருட்கள், சிகரெட்டுகள், மதுவகைகள் போன்றனவற்றை இரட்டிப்பு விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்துகின்ற மக்களும் உள்ளனர்.

4. சுற்றுலாவினால் விலைவாசியும் உயர்கிறது. ஓரிடத்திற்கு மிகுதியான பயணிகள் வரும்பொழுது அவ்விடத்துப் பொருட்களின் விலை உயர்ந்து விடுகிறது. சில பொருட்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்படுகிறது. அதனால் உள்ளூர் மக்கள் துன்பப்படுகின்றனர். சுற்றுலாப் பயணிகளிடம் உள்ளூர் வணிகர்கள் கொள்ளை இலாபம் பெற நினைக்கின்றனர்.

5. சுற்றுலாப் பயணிகளால் அங்கு வாழும் மக்களுக்குச் சில இடர்கள் ஏற்படும். அப்பகுதிகளில் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகள் மறுக்கப்பட்டுப் பயணிகளுக்கு வழங்கும். மிகுதியான பயணிகளால் கோடைகாலத்தில் இலண்டன் கோச்சுகளில் பயணம் செய்வது எரிச்சல் ஊட்டுவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். சுற்றுலாப் பயணிகளின் மிகுதியினால் பொது வாகனங்களில் நாள் முழுவதும் பெருங்கூட்டம் உள்ளது. நகரத் தெருக்களில் பெருங்கூட்டங்கள் காணப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகள்

Scanned by CamScanner

அப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு எவ்வகை இடையூறும் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். சுற்றுலாவினால் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்கின்றன. பயணிகளில் சிலர் அந்நாட்டுப் பண்பாட்டை ஏற்றுக் கொள்கின்றனர். அந்நாட்டு மக்களில் சிலர் பயணிகளின் பண்பாட்டை ஏற்றுக் கொள்கின்றனர்.

6. சுற்றுலா விரும்பத்தகாத எதிர்விளைவுகளையும் உருவாக்கிவிடும். பொருளாதார வளம் பெறாத இடங்களுக்கும், வாழ்க்கைத் தரம் குறைந்த இடங்களுக்கும் பணக்காரப் பயணிகள் செல்வதால், அங்கு வாழும் மக்கள் மனத்தில் பொறாமையும், வாழ்க்கையில் வெறுப்பும் ஏற்படுகின்றன. இளைஞர்களில் சிலர் பிறநாட்டு உச்சரிப்பு, சொற்கள் நடை, உடை பாவனைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றையும் மேற்கொண்டுள்ளனர்.

Scanned by CamScanner

(உ-ம்) பயணிகளின் எண்ணிக்கை உதகை நகருக்கு அதிகமாகின்றபொழுது உதகை மட்டுமல்லாது தங்கும் இடத்திற்காக அதன் அருகில் உள்ள இடங்களும மேம் படுத்தப்படுகின்றன. இதனால் உற்பத்தி பொருட்கள் நல்ல விற்பனை அடைகின்றன. அவற்றினால் ஏற்று மதிக்கும் நல்ல முன்னேற்றம் பிறக்கிறது.

## செலவழிக்கப்பட்ட தொகையைக் கணக்கிடுதல்

செலவழிக்கப்பட்ட தொகையை நாம் மதிப்பிடு தல் மிகவும் கடினம். இருப்பினும் திட்டமிட்டு செல விடுதல் செல்லும் பயணத்திற்கு இன்ப விளைவைக் கொடுக்கும். ஒரு சுற்றுலா மையத்தில் செலவிடப்பட்ட மொத்த தொகையை மொத்த சுற்றுலாக் குழுவால் வகுத்து அதன்மூலம் கிடைக்கும் விகிதம் ஒருநாளைக்கு செலவு செய்த தொகையாகும. அத்தொகை சுற்றுலா வினால் ஏற்படுகின்ற பொருளாதார மேம்பாட்டை எடுத்துக் காட்டும்.

பயணச் செலவை இரு பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம். 1. பயணத்திற்காக செலவிடப்பட்ட தொகை (விமானம், பேருந்து, வாடகை கார், ரயில்) 2. ஒரு குறிப்பிட்ட சுற்றுலா மையத்தில் தங்குகின்ற பொழுது ஏற்படும் இதர செலவினங்கள். இத்தகைய பயணங்களின் விளைவால் அன்னிய செலாவணி அதிக மான அளவில் மிச்சமாகும். வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்தவும் அதிக வசதி களைச் செய்து தரவும், அவர்கள் விரும்பும் அவர்களது நாட்டு உணவை உண்ண புதிய ஏற்பாடுகளையும் செய்யலாம். இதன்மூலம் அரசினுடைய வருவாய் மிக அதிக அளவில் அதிகரிக்கும் என்பது "உள்ளங்கை நெல்லிக்கனி". 1970-இல் 220 உலக சுற்றுலாப் பயணி கள் 43மில்லியன் அமெரிக்க டாலர்கள் பணத்தை செல வழித்துள்ளனர். அது போல 1979-இல் இந்தியாவிற்கு

Scanned by CamScanner

வருகை புரிந்த 7,64,700 பேர்கள் வெளிநாட்டுப் பயணிகளாக வந்துள்ளனர். அவர்கள் 3,350 மில்லியன் ரூபாய் இந்தியாவில் செலவழித்துள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு இந்தியாவிலிருந்து வெளிநாடு செல்லும் பயணிகள் ஓர் குறிப்பிட்ட தொகையை மட்டும் அன்னிய செலாவணியாக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

ரிசர்வ் வங்கி அளிக்கும் அத்தொகைக்கு மேலாக அப்பயணி பணத்தை எடுத்துச் செல்வது சட்டப்படி தவறாகும். இதனை சராசரியாக நாம் கணக்கிட்டால் இந்தியாவிலிருந்து ஓர் ஆண்டிற்கு வெளிநாடுகளுக்கு செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை அறிந்து அத்துடன் அரசு கொடுக்கும் அந்நிய செலாவணியைப் பெருக்கினால் வெளிநாட்டிற்காகச் செலவிடும் அந்நிய செலாவணி நமக்கு தெரியவரும்.

புள்ளி விவரக் கணக்கை விடுப்பதன் மூலம் ஒரு நாட்டினுடைய சுற்றுலாவை எவ்வகையில் மேம்படுத்தலாம்? அவ்வாறு மேம்படுத்துவதின் மூலம் அரசு பெரும் அனுகூலங்கள் என்ன? அதனால் ஒவ்வொரு ஆண்டும் எந்த அளவிற்கு வருமானம் கிடைக்கின்றது அல்லது செலவு ஏற்படுகின்றது. எந்த இடத்திற்கு வெளிநாட்டு பயணிகள் அதிகம் விரும்பி வருகின்றனர். அவ்வாறு வரும்பொழுது அவர்களின் முழு தேவைகளும், நிறைவேற்றப்படாமல் காணப்படும் தடைகள் என்ன? இந்திய சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் எப்பகுதிக்கு அதிகம் செல்ல உள்ளனர்? அதன் மூலம் இந்தியாவின் வேலை வாய்ப்பும் வருவாயும் அதிகரிக்கின்றதா? அவ்வாறு அதிகரிக்கவில்லை என்றால், வருவாயை அதிகரிக்க எத்தகைய வழிகளை கையாளலாம் என்பதைப்போல பல திட்டங்களை மேற்கொண்டு ஒவ்வொரு ஆண்டும், வரவு செலவு திட்டத்தில் அரசு மானியத்தை கொடுக்கும். இப்புள்ளி விவரக்கணக்கு ஒவ்வொரு ஆண்டும் ஏற்படுத்தினால்தான் அரசினுடைய திட்டங்கள் செயல்படும். சுற்றுலாப்பயணத்தின் நோக்கம் நிறைவேறும். பயணிகளின் பயணமும் மகிழ்வுறும்.